கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

# CC.No. 11/2024

2024-ம் ஆண்டு ஜுலை மாதம் 24 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமு | வயது | 28 |
| தந்தை பெயர் | சாமிக்கண்ணு | ஜாதி | |
| தொழில் | பைனான்சியர் | மதம் | |
| ஊர் | திருக்கண்ணமங்கை | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார்.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருக்கண்ணமங்கையில் வசித்து பைனான்சியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது ஊர்க்காரர். கடந்த 2019 ஆம் வருடம் நான் எனது சித்தப்பா வீட்டில் இருந்த பருத்தி மூட்டைகளை எனது வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து கொண்டு இருந்தேன். திருக்கண்ணமங்கை அருகே வந்து கொண்டிருந்த போது அங்கு நடு ரோட்டில் கல் கிடந்தது. அங்கு நின்று கொண்டிருந்த சின்ன பசங்களை கல்லை எடுக்க சொன்னேன். அப்போது அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரி இது உனது அப்பன் வீட்டு ரோடா என்று தகராறு செய்தார். நான் ஆமாம் என்று சொல்லிவிட்டு நான் எனது சித்தப்பா வீட்டிற்கு சென்று விட்டேன். அன்றைய தினமே சிறிது நேரம் கழித்து ஆஜர் எதிரி எனது சித்தப்பா வீட்டிற்கு வந்து குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி அங்கு கிடந்த தென்னை மட்டையில் செய்த கிரிக்கெட் விளையாடும் கட்டையால் எனது பின் கழுத்து பகுதியில் அடித்தார். பிறகு ஆஜர் எதிரி அங்கிருந்து சென்று விட்டார். அவர் அடித்ததில் எனது பின் கழுத்து பகுதியில் வலி இருந்தது. அதன் காரணமாக திருவாரூர் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாகசிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். தற்போது ஆஜர் எதிரியுடன் நான் சமாதானம் ஆகி விட்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

**நீதிமன்ற புறக்கணிப்பு காரமணாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.11/2024**

2024-ம் ஆண்டு ஜுலை மாதம் 24 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிக்கண்ணு | வயது | 56 |
| தந்தை பெயர் | கிட்டு | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | திருக்கண்ணமங்கை | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருக்கண்ணமங்கையில் வசித்து விவசாய தொழில் செய்து வருகிறேன். அ.சா.1. என்னுடைய மகன் ஆவார். ஆஜர் எதிரி என்னுடைய உறவுக்காரர் ஆவார். அ.சா.1 க்கும் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 06.06.2019 ஆம் தேதி மாலை 6.15 மணிக்கு எனது மகனான அ.சா.1 ஐ ஆஜர் எதிரி தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி கிரிக்கெட் மட்டையால் கழுத்து பகுதியில் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்று போலீஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவுக்காரர் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற புறக்கணிப்பு காரமணாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.